# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 11

இந்து தர்மத்தில் ஆன்மிக, தர்ம, கர்மங்களை அநுசரித்து யுகங்கள் மூன்று விதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, கர்மத்தையே சிறப்பாகக் கொண்ட வேத யுகம்; இரண்டாவதாக, ஞானத்தையே பிரதானமாகக் கொண்ட உபநிஷத் யுகம்; மூன்றாவதாக, பக்திக்குச் சிறப்பளித்த புராண யுகம். வேத புத்தகங்கள் கூட ஸம்ஹிதைகள் பிரஹ்மணங்கள், அரண்யகங்கள், உபநிஷத்தங்கள் என நான்கு பிரிவுகளாக்கப்பட்டுள்ளன. அதில் முதல் மூன்று பிரிவுகளான ஸம்ஹிதை, பிரஹ்மணம், அரண்யகம் எனப்படுபவை கர்ம காண்டங்கள். ஞானத்தைப் பற்றியதாதவால் உபநிடதங்கள் ஞான காண்டம் எனப்படும். வேத சம்ஹிதையில் இந்திரன், அக்கினி, வருணன், சூரியன், ருத்திரன் முதலான தேவர்களைப் பற்றிய ஆராதனை மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரங்களைக் கொண்டே பழங்கால ஆரியர்கள் யாகம் யக்ஞங்கள் நடத்தித் தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

பரமாத்மா ஒருவரே ஆனபோதிலும், பலவித நாமங்களோடும், உருவங்களோடும் தோன்றியிருக்கிறார் என்ற சத்தியத்தை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். இந்தத் தத்துவத்தைக் குறித்து ரிக் வேத மந்திரங்கள் இவ்வாறு அறிவிக்கின்றன.

**ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி**
**அக்னீம் யமம் மாதரி ச்வான மாஹு:॥**

தத்துவத்தை அறிந்தவர்களான மகாத்மாக்கள், ஒரே சத்தியப் பொருளான பரப்பிரம்மத்தை யமன் அக்னி மாதரிச்வான் முதலிய பல பெயர்களால் புகழ்கிறார்கள். இதன் பொருள் என்ன வென்றால், அத்வைதம் பொருளான (ஏகமான, இருமையற்ற, ஒருமையான) பிரம்மத்தை ரிக்வேதத்தில், ஒவ்வொரு வார்த்தையிலும், ஹிரண்யகர்ப்பன், ப்ரஜாபதி, விஸ்வகர்மா, புருஷன் முதலான நாமங்களால் குறிப்பிடுகிறார்கள். ரிக்வேதத்தில் உள்ள ஹிரண்ய கர்ப்பஸூக்தம், புருஷ சூக்தம் முதலானவைகளே இதற்கு உதாரணங்களாகும்.

பழங்கால ஆரியர்களின் முக்கியமான நியமங்கள் தர்மமே. அதை யக்ஞம் என்றும் சொல்லலாம். அவர்களின் யக்ஞம் போன்ற அனுஷ்டானங்கள், அர்ச்சனைகள், வழிபாடுகள் ஆகியவைகள் பக்திபூர்வமான செயல்களாக இருந்தன. வேதம் ஸம்ஹிதையில், ''பக்தி' என்ற சொல்லைத் தெளிவாகப் பயன்படுத்தாவிட்டாலும் அதே கருத்தில், "சிரத்தை" என்ற சொல்லை அடிக்கடி உபயோகித்திருப்பதைக் காணலாம்.

**ச்ரத்தயாக்னி : ஸ்மித்யதே ச்ரத்தயாஹூயதே ஹவி:**
**ச்ரத்தாம் பகஸ்ய மூர்த்தனி வசஸா வேதயாமஸிட ll**

''சிரத்தையின் மூலமாகத்தான் யாகாக்னி (யாக நெருப்பு) கொழுந்துவிட்டு எரிகிறது. சிரத்தையின் மூலமாகவே நைவேத்தியப் பொருளான அவிர்ப்பாகம் அந்தந்த தேவர்களைப் போய்ச் சேருகிறது. எல்லாவற்றிற்கும் ஆதாரமான சிரத்தையைப் போற்றிப் புகழ்வோம்' என்ற பொருளைக் கொண்ட இந்த சுலோகத்தை ஊன்றிப் படியுங்கள். சிரத்தை எவ்வளவு சக்தி வாய்ந்தது என்று யோசித்துப் பாருங்கள்.

வேத காலத்தில் தெய்வ பக்திக்கு இயல்பான எளிய நியமங்களையே செயல் முறையில் கையாண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட எளிய பக்தி தர்மங்கள், காலக்கிரமத்தில் ஆசார அனுஷ்டானங்கள் நிறைந்த யாகயஞ்களாக, சிக்கல்கள் நிறைந்தவையாக மாறிவிட்டன. சிறிது சிறிதாக மதம் வளர்ந்து, 'யக்ஞமே தர்மம்", யாக யக்ஞம் மூலமாகத்தான் ஜீவன்கள் சகல நன்மைகளையும் பெற முடியும் என்று உபதேசிக்க ஆரம்பித்து விட்டார்கள். யக்ஞம் தேவர்களை உத்தேசித்து நடத்தப்படுபடுவது. வழிபாட்டில் இதுவே முறை. ஆனால் வழிபாட்டின் சிறப்பைத் தேவர்களுக்குத் தராமல், தேவர்களை மறந்து யக்ஞத்தையே வழிபட ஆரம்பித்து விட்டார்கள். "சுவர்க்கத்தை அடைய விரும்புவர்கள் யக்ஞம் செய்ய வேண்டும். அதை அடைய உதவுபவர்களே தேவர்கள் " என்ற வேதவாதம் ஆரம்பமாகியது.

இதனிடையிலே உபநிஷத் யுகம் தோன்றியது. ஆக்மாவை மறந்த பௌதிக வாதங்களைக் கண்டித்து, வேத கர்ம காண்டமே சம்சார சாகரத்தில்

இருந்து கரையேற்றும் நாவாய் என்பதாக வேத கர்ம காண்டத்தையே திருத்தி உபநிஷத்தில் அமைத்து விட்டார்கள். இந்த யுகத்தில் சாதகனின் பார்வை வெளியுலகத்திலிருந்து உள் உலகை நோக்கித் திருப்பப்பட்டது. உபநிஷத் யுகத்து ரிஷிகள் அனைவரும் ஒன்று கூடி, உயர்ந்த தத்துவங்களின் உருவத்தைப் பின்வருமாறு தீர்மானித்தனர். ''நாம ரூபங்களோடு கூடிய, இந்த மறையக்கூடிய, மாறக் கூடிய உலகத்தில், நித்தியமான, சாஸ்வதமான சத்தியப் பொருள் ஒன்று உண்டு. அதுவே பரப்பிரம்மம். அந்த பரமேஸ்வரனை ஞான யோகம் மூலமாகத்தான் அறிய முடியும்.'' ''தத் விஞ்ஞானஸ்வ, தத் ப்ரஹ்ம " இந்தப் பிரம்ம வித்தையை உபநிஷதங்கள் (வேதாந்தங்கள்) உபதேசிக்கின்றன. இதுமட்டு மல்ல. "வேதமே சுவர்க்கத்தை அடைய உதவும் சாதனமாக இருந்த போதிலும், முக்தியை அடையவும் அதுவே வழிகாட்டுகிறது. பிரம்ம வித்தையைக் கொண்டு மாத்திரம் பிரம்மத்தை அடைந்துவிட முடியாது'' என்றும் கூட உபநிஷத் கூறுகிறது.

உயர்ந்த தத்துவங்கள் பலவற்றைப் படிப்பதாலும், நூல்கள் பல கற்றுப் பாண்டித்தியம் பெறுவதாலும், பரமாத்மாவை அடைய முடியாது. எந்தச் சாதகன் பரமாத்மாவை வழிபட்டு வருகிறானோ, அவனே அந்தப் பரம்பொருளை அடைய முடியும். இனியும் ஒன்றையும் மறக்கக் கூடாது. மேலே சொல்லப்பட்ட கிரந்தங்களைப் படித்தல், அவைகளை மனனம் செய்தல், பாண்டித்தியத்திறமை ஆகியவைகளோடு பரமாத்ம உபாசனையும் சேருமானால் அவன் மிகவும் புண்ணியம் செய்தவனாவான். அவனே பவித்திரம் நிறைந்தவன். பரமாத்மாவின் உண்மை உருவத்தைக் கண்ணெதிரில் காணக் கூடியவன். அதனாலேயே பிரஹதாரண்யகோபநிஷத் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பை இவ்வாறு அறிவிக்கிறது.

**ஏஷாஸ்ய பரமாகதி-ஏஷாஸ்ய பரமம் சம்பத்**
**ஏஷாஸ்ய பரமோலோகா ஏஷாஸ்ய பரமானந்தம்: II**

''ஜீவாத்மாவுக்கு சரணாலயம், உயர்ந்த செல்வம், பரம லோகம், பரமானந்தம் ஆகிய அனைத்தும் பரமேஸ்வரனே."

"பவித்ரமான உணர்வுக் கலவையின் உருவமான பரமேஸ்வரனே திருப்தி தருபவன். ஜீவன் அவரை அடைந்து ஆனந்தம் பெறுவான்" என்றும், "இதய வான வெளியில் இந்த ஆனந்த ஸ்வரூபனான பரமாத்மா இல்லையென்றால் உணர்வது எதை ? உயிர் வாழ்வது எங்ஙனம்? அனைவருக்கும் ஆனந்தம் தருபவன் அவனே" என்றும், தைத்திரியோபநிஷத் முழங்குகிறது. வேத ஸம்ஹிதையில் நடப்பட்ட பக்தி என்னும் விதை, உபநிஷத்தில் முளை விட்டு வளர்ந்து, புராணங்களில் பெருகி, மலர்களும் கனிகளும் நிறைந்த மரமாகக் காட்சி அளிக்கிறது.

பக்தி என்பது எது, அது எப்படிப்பட்டது என்று பலரும் குழப்பமடைகிறார்கள். பக்தி இப்படிப்பட்டது என்று உறுதியாகக் கூற யாராலும் இயலாது. பக்தி பாவம் பல தரப்பட்டது. நிர்மலம், அழகு, இரக்கம், அமைதி, அன்பு நிறைந்த இதயம் ஆகிய நற்குணங்கள் நிரம்பிய சாதுக்களால்தான் இதை அறிய முடியும். மற்றவர்களுக்கு இது பாறையில் அழகையும், நெருப்பில் இமயக் குளிரையும், வேம்பில் இனிப்பையும் அறிவதே போல அவ்வளவு சிரமமானது.

பக்தனுக்கு பரமாத்மா உயிரை விட மேலானவர். அது போல பரமாத்மாவுக்குப் பக்தன் மிகவும் பிரியமானவன். பகவானை காட்டிலும் பக்தர்களே உயர்ந்தவராவர் என்று சில மகான்கள் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு சமுத்திரத்தை விட மேகங்களின் மேல் தான் அன்பு மிகுதி ஏனெனில் மேகங்களாலேயே அவர்களுடைய பயிர்கள் தழைக்கின்றன. சமுத்திரம் தானாகவே எழுந்து வந்து பயிர்களை நனைத்து வளர்ப்பதில்லை. மேகங்கள் சமுத்திரத்தின் நீரை சுமந்து வந்து தான் மழையாகப் பொழிகின்றன என்பதை அவர்கள் அறிந்தாலும் மேகங்களையே மிகவும் நேசிக்கிறார்கள். பக்தர்களை மேகங்களுக்கும், காற்றுக்கும் ஒப்பிட்டுத் துளசிதாஸ் கூட எழுதியிருக்கிறார். காற்றின் நறுமணம், மேகங்களின் நீர் இவை இரண்டும் சமுத்திரத்திற்குச் சொந்தமானவை. தயை, உதாரகுணம், அன்பு ஆகிய தெய்வீகப் பண்புகளைப் பக்தர்களே காற்றையும், மழையையும் போல உலகில் பரப்புகிறார்கள். சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டி எடுப்பது போல, பக்தர்கள் பகவானிடமிருந்து இந்த நற்பண்புகளைப் பெறுகிறார்கள்.

அம்பரீஷ மன்னனுடைய பக்தி பாவத்தைப் பரீட்சை செய்வதற்காக் துர்வாச மகரிஷி ஒரு நாள் அவனைத் தேடி வந்தார். காரணமில்லாமலேயே அம்பரீஷன் மேல் கோபங்கொண்டு அவனை அழிக்கக், ''கிருத்யாவை' உண்டாக்கினார். பக்தர்களைப் பயத்திலிருந்து காக்கும் ஸ்ரீமந் நாராயணனுடைய சக்கரம் கிருத்யாவை அழித்துவிட்டுத் துர்வாசரையும் துரத்தியது.

தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, அவர் வனம், மலைகள், ஏரிகள், நதிகள், சமுத்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் தாண்டி சத்திய லோகம், கைலாயம் ஆகாயம் முதலானவற்றையும் கடந்து ஓடினார். பக்தனின் எதிரி என்பதால் ஒருவரும் அவருக்கு அபயம் அளிக்கவில்லை . கடைசியாக, ஏதும் செய்ய இயலாதவராகி, வைகுண்டத்துக்கே ஓடி ஸ்ரீமத் நாராயணனின் மலரடிகளில் விழுந்து ரட்சிக்கும் படி வேண்டினார். "நானே சகலமும் என்று என்னையே சரணடைந்த என் பக்தர்களை நான் ஒரு நாளும் கைவிடமாட்டேன். பசுவைத் தொடர்ந்து செல்லும் கன்றைப் போல என் பக்தர்களை நான் பின்தொடர்வேன். ஏனெனில் என் பக்தர்கள் என்பொருட்டு உற்றார், உறவினர், மனைவி, சொத்து, சுகம் ஆகிய உலகத்தொடர்புகள் அனைத்தையும் விட்டு என்னையே சரணடைகிறார்கள்'' என்றார் ஸ்ரீமந் நாராயணன்.

ஒரு முறை ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்: ''தவம், ஞானம், வைராக்கியம், யோகம், தானம் தர்மம், தீர்த்தயாத்திரை முதலான சாதகங்களின் மூலம் எந்த விதமான பலனைப் பெறுவார்களோ, அந்தப் பலனை என் பக்தர்கள் என்னிடம் பக்தி செலுத்துவதன் மூலம் வெகு எளிதாகப் பெறுகிறார்கள்.''

உண்மையான பக்தியின் உயர்வு எப்படிப்பட்டது என்று சிந்தித்துப் பாருங்கள். ''பக்தியின் மூலம் இழிகுலத்தவன் பிராமணனைவிட உயர்ந்தவனாகிறான். பக்தியில்லாத இடத்து, பிராமணன் இழிகுலத்தவனாகிறான்' என்று புராணங்களில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது, இல்லையா?

இனி புராணங்களின் தர்மம் என்னவென்று பார்ப்போம். வேதங்கள் இதுவல்ல, இதுவல்ல (நேதி நேதி) என்று சொல்லிக் கொண்டு, 'யதோ வாசோ நிவர்த்தனே அப்ராப்ய மன ஸாஸ ஹ" தர்மம், வார்த்தைகளுக்கும் மனத்தின் பிடிக்கும் தூரமானது என்று கூறுகிறது. எந்த இறைதத்துவம் புலன்கள், மனம், புத்தி ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டதோ, அந்தத் தத்துவம் உயர்ந்த நிலையை அடைந்த, தியானத்தில் மூழ்கியுள்ள ஞானிகளுக்கு மட்டுமே அநுபவமாகும் தன்மையுடையது. அப்படிப்பட்ட பரம தத்துவம், பக்தி என்னும் சாதகம் மூலமாகப் பக்தனை அடைந்து, அவனைப் பேரின்பத்தில் ஆழ்த்துகிறது. அதை அவன் உணர்வு பூரவமாக அறிந்து ஆனந்திக்கிறான்.

புராணங்கள் பகவானை ஞானம் பிரம்மம், (நிர்க்குண, நீர்விகார, அத்வைதி, சித்ரூபன், ஜகத்காரகன்) குணங்கள் அற்றவர், மனோ விகாரங்கள் அற்றவர், ஏகமான பரம்பொருள், ஞான சொரூபன், உலகத் தோற்றத்துக்குக் காரணமானவர் என்றும், வழிபடுவதற்கும், ஆராதிப்பதற்கும் தகுந்த பிரேம மூர்த்தி, அழகும் இனிமையும் பொருந்தியவர், சகல நற்குணங்களும் ஓர் உருவானதைப் போன்றவர், பதிதர்களை மன்னிப்பவர் என்யறல்லாம் வர்ணிக்கின்றன.

புராணங்களின் உபதேசம் என்னவென்றால், ஞானமார்க்கத்தில், உருவமற்ற, குணங்களைக் கடந்த பிரமத்தை வழிபாடுதல் உடலின் மேல் பற்றுதல் கொண்ட மனிதர்களுக்குச் சிரமமான செயலே. உடலின் மேல் உள்ள பற்றுதல் நசிந்தால் தான் நிர்க்குணப்பிரம்மத்தை (குணங்களைக் கடந்த பிரமத்தை) அறிய முடியும். ஆனால், பக்தி மார்க்கத்தில் சகுண (உருவம்) பிரம்மத்தை வழிபடுவது என்பது சாதாரண எளிய மானிடனுக்கும் ஏற்ற சுலபமான வழி. இந்தக் காரணத்தாலேயே புராணங்களில் உருவ வழிபாட்டைக் குறித்துச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. உருவ வழிபாட்டின் வாயிலாக மனத்தை ஒருமுகப்படுத்தி, படிப்படியாக உயர்ந்து, உருவமற்ற பரம்பொருளிடம் மனத்தைச் செலுத்தி, அதிலேயே ஐக்கியமாகிவிடுவது எளிது. இதையே ஸ்தூல சௌரம்பிகாண்யாயம் என்பார்கள். நீர் வேட்கையால் தவிக்கும் மனிதன் கானல் நீரைப் பின்பற்றி ஓடியலைந்து, பின்னர்

திரும்பிவந்து, குளத்தை அடைந்து நீரைப்பருகித் தாகம் தணிவது போன்றது இது.

அதே விதமாக மோட்சத்தைத் தேடியலையும் சாதகர்கள் நிர்குணப் பிரம்மத்தை ஆராதிப்பதில் விருப்பம் காட்டுவார்கள். பக்தவத்சலனான பகவான் உருவமற்றவராக (நிராகாரம்) இருந்தபோதிலும், சாதுக்கள், மகான்கள் ஆகியவர்களின் இஷ்ட தேவதையின் உருவத்தை மேற்கொண்டு அவர்களுக்குத் தரிசனம் தருவார். அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நால்வகை அறங்களையும் அவர்களுக்கு அருள்வார்.